# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளுங்கட்சி / எதிர்கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 9846 / 2009 / எம்சி. 8 நாள் : 23.09.09

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக்கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

வணக்கம். கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக்கூட்டம் வருகின்ற 30.09.2009 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற சாதாரணக் கூட்டம்

## செப்டம்பர் 2009

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | Jnnurm – மழைநீர் வடிகால் அமைக்கும் பணி – ரூ.180 கோடி மதிப்பீடு –மாநகராட்சி பங்கு நிதி கடனாகப் பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 2 | நகரமைப்பு - Jnnurm- பாதாள சாக்கடைத் திட்டம் -கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் - நஞ்சுண்டாபுரம், உப்பிலிபாளையம் கிராமம் - சர்வே எண் 655 உள்ளிட்டவை – 6.24 ஏக்கர் நிலம் - நில உபயோக மாற்றம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | நகரமைப்பு - Jnnurm- தெற்கு மண்டலம் - உக்கடம் கழிவு நீர் பண்ணை- நகரளவு எண்கள் 57 உள்ளிட்டவை – 32.69 ஏக்கர் நிலம் - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 4 | நகரமைப்பு - Jnnurm- வார்டு எண் 54 – எஸ்.எப். நெ. 107 உள்ளிட்டவை- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 5 | நகரமைப்புப் பிரிவு - Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர் கிராமம் - புல எண்கள் 758/1 உள்ளிட்டவை – நிலம் கையகப்படுத்துதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. (இணைப்பு -1) |
| 6 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 53 – செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் கட்டப்பட்ட புதியதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடம் - வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 7 | மேற்கு மண்டலம் - வார்டு எண் 51 – தடாகம் ரோடு வாழைக்காய் மண்டியில் புதியதாக கட்டப்பட்ட சமுதாயக் கூடம் -வாடகை நிர்ணயம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 8 | தெற்கு மண்டலம் - அவினாசி ரோடு வணிக வளாகம் கடை எண் 23 – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | தெற்கு மண்டலம் - ரங்கே கவுண்டர் வீதி வணிக வளாகம் கடை எண் 1 முதல் 5 வரை – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 10 | தெற்கு மண்டலம் - திரு வி.க. மார்க்கெட் வணிக வளாகம் கடை எண் 1 முதல் 23 வரை – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் மற்றும் மறுஏலம் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 11 | பணியமைப்பு - உயர்நீதிமன்ற மாநகராட்சி நிலை வழக்கறிஞர் நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 12 | பணியமைப்பு - மிக முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள் - முதுநிலை வழக்கறிஞர் நியமனம் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 13 | பணியமைப்பு - திருமதி எஸ். ஸ்டெல்லாரோசி, பலநோக்கு சுகாதார பணியாளர் - உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு மாறுதல் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | பொதுப்பிரிவு -டெக்ஸ்கோ நிறுவன ஓட்டுநர்கள் - ஆறுமாத காலத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 15 | பொது சுகாதாரப் பிரிவு - துப்புரவு பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - வார்டு எண் 33- டாடாபாத் நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது - ரத்து செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 17 | நகரமைப்பு - விளாங்குறிச்சி கிராமம் - சர்வே எண்கள் 426/1 உள்ளிட்டவை – விப்ரோ நிறுவனம் - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 18 | நகரமைப்பு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 34 – நகரளவு எண் 4/5 - லட்சுமி டவர் வளாகம் - திரு. அ. அருண்மொழி மாணிக்கம் விண்ணப்பம் - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 19 | நகரமைப்பு - வடக்கு மண்டலம் - கிருஷ்ணராயபுரம் கிராமம் - நகரளவு எண் 95/2 – 393.9 சென்ட் இடம் - திரு ஜெ.ஆர். நெஜட்லி மற்றும் திரு ஜி. பாலசுப்பிரமணியம் விண்ணப்பம்- பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 20 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் கிராமம் எஸ்.எப். நெ. 391/07 – தி/வா. அர்பன் எட்ஜ் ஹோட்டல் நிறுவனம் - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 21 | நகரமைப்பு - வடக்கு மண்டலம் - சித்தாபுதூர் கிராமம் - நகரளவு எண் 1370/I உள்ளிட்டவை – 47 சென்ட் 233 சதுரடி இடம் - தி/வா. அட்ராய்ட் நிறுவனம் - பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோருதல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக. |
| 22 | நகரமைப்பு - பேருந்து நிழற்குடைகள் அமைத்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 23 | நகரமைப்பு - வடக்கு மண்டலம் - கிருஷ்ணராயபுரம் கிராமம் - சர்வே எண் 132/5- 55 சென்ட் நிலம் - தாமோதரம் தர்ம ஸ்தாபனம் - நிலம் கையகப்படுத்தி பள்ளி கட்டிடம் அமைத்தல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக |
| 24 | பணியமைப்பு - திரு எம். சௌந்தரராஜன், செயற் பொறியாளர் (திட்டம்) – மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிய அரசின் அனுமதி பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

## அ) திருக்குறள்

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

**(குறள் -236)**

## விளக்கம்

**எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்க வேண்டும்; இயலாதவர்கள் அந்தத் துறையில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது.**

**திருவள்ளுவர்.**

---

## ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

பொருள் எண் 1

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து 72 வார்டு பகுதிகளில் சாலையோர மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணியினை இரு பகுதிகளாக ரூ 702.61 கோடி மதிப்பில் (பகுதி I – ரூ 236.20 கோடி, பகுதி II - ரூ 466.41 கோடி) மேற்கொள்ளவும், இயற்கை வடிகால்களை புனரமைத்து கட்டும் பணியினை மூன்றாம் பகுதியாக ரூ 389.25 கோடி மதிப்பில் மேற்கொள்ளும் வகையில் கலந்தாலோசக நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் மத்திய நகர்புர வளர்ச்சித் துறையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

கடந்த 28.08.2009ல் புதுதில்லியில் நடைபெற்ற மத்திய நகர்புர வளர்ச்சி துறையின் "ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக் குழு"வின் 76 வது குழு கூட்டத்தில் மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின் முதல் கட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் ரூ 180.00 கோடி மதிப்பிலான பணிகளுக்கு மட்டும் முதல் கட்டமாக ஒப்புதல் வழங்கியுள்ளது. சாலையோர மழைநீர் வடிகால்கள் அமைக்கும் திட்டத்தின் முதல் கட்ட பணியில் 112 மண்டலங்களாக பிரிக்கப்பட்ட மாநகரப் பகுதிகளில் 31 மண்டலப்பகுதிகளில் மட்டும் மழைநீர் வடிகால் அமைக்க மாமன்றத்தில் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் மதிப்பீடு (ரூ. கோடியில்) | மத்திய அரசின் 50% மானியம் (ரூ. கோடியில்) | மாநில அரசின் 20% மானியம் (ரூ. கோடியில்) | மாநகராட்சியின் 30 % பங்கு தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1. | சாலையோர மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி (பகுதி –I) | 180.00 | 90.00 | 36.00 | 54.00 |

அலுவலகக்குறிப்பு

அ. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சாலையோர மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நகர்புர வளர்ச்சி துறையின் "ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்புக் குழு"- வினால் ரூ 180.00 கோடி மதிப்பிலான பணிகளுக்கு வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு மாநில அரசின் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களின் மூலமாக முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ. மேற்படி திட்டத்தினை செயல்படுத்தும் போது மாநகராட்சியால் செலவலிக்கப்பட வேண்டிய 30% சதவீதம் பங்கு தொகையினை தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து (டூஃபிட்கோ) கடனுதவி பெற்று திட்டத்தினை நிறைவேற்ற மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ. பகுதி I திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நீங்கலாக மீதமுள்ள இரு கட்ட பணிகளுக்கு (பகுதி II மற்றும் பகுதி III) மத்திய அரசின் ஒப்புதல் பெறவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்

ந.க.எண் : 13088/06/ஜே.என்4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 73 நாள் 30.9.2009</u>

(அ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சாலையோர மழைநீர் வடிகால் அமைக்கும் (பகுதி-I) பணியின் மதிப்பீட்டுத் தொகையான ரூ. 180.00 கோடிக்கு மத்திய அரசின் நகர்புற வளர்ச்சித் துறையின் ''ஒப்புதல் வழங்கும் மற்றும் கண்காணிப்பு குழு'' ஒப்புதல் வழங்கியதை மாமன்றம் ஏற்று பதிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு மாநில அரசின் நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் மூலமாக முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(இ) மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய நிதியுடன் மாநகராட்சி பங்கு நிதியான 30% நிதியினை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திடம் (TUFIDCO) கடனுதவி பெற்று பணியினை நிறைவேற்றவும், அதற்கான ஆவணங்களில் மாநகராட்சி ஆணையர் கையொப்பம் இடவும் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஈ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள சாலையோர மழைநீர் வடிகால் அமைக்கும் பணி பகுதி-II மற்றும் இயற்கை வடிகால்களை புனரமைத்து கட்டும் பகுதி-III பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள விரிவான திட்ட அறிக்கைகளுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 2**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - ஜவஹர்லால் நேரு நகர்புர புனரமைப்பு திட்டத்தின்படி - நஞ்சுண்டாபுரம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் உப்பிலிபாளையம் கிராமம் சர்வே எண்.655, 656/2, 657 மற்றும் 658 நில உபயோக மாற்றம் - குறித்து .

பார்வை (1). கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு நகர்புர புனரமைப்பு திட்டம் கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் கடிதம் ந.க.எண்.4617/09/ஜே.எண்.4. நாள். 22.07.2009.

(2). மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் கடிதம் எண்.DEE/TNPCB/CBE/F2035 2009 நாள்.29.06.2009

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 16 வார்டுகளில் உருவாகும் கழிவு நீரினை வெளியேற்றவும் சுத்திகரிக்கவும், பாதாள சாக்கடை திட்டம் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் துவங்கப்பட்டு கழிவுநீரை பம்பிங் செய்யப்படாமல் தானாகவே வந்து சேரும் வகையில், நஞ்சுண்டாபுரம் உப்பிலிபாளையம் கிராமம் சர்வே எண். 655, 656/2, 657 மற்றும் 658 ல் உள்ள 6.24. ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் கழிவுநீர் குட்டை மற்றும் கழிவு நீரேற்று நிலையம் கட்டப்பட்டு, இத்திட்டம் 1997-ம் ஆண்டு முதல் இயக்கப்பட்டது.

மேற்கண்ட இடம் மாநகராட்சி சர்வே ஆவணங்களின்படி, தமிழ்நாடு கழிவுநீர் வடிகால் வாரியம் என்ற பெயரில் உள்ளது. இத்திட்டம் கடந்த 1999-ம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கோவை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு மாநகராட்சியின் மூலம் இதுநாள் வரை பராமரிக்கப்பட்டு வருகிறது.

பார்வை 1-ல் கண்ட JNNURM அலுவலக குறிப்பின்படி ஜவஹர்லால் நேரு நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் நஞ்சுண்டாபுரத்தில் 40.எம்.எல்.டி. கொள்ளளவு திறன் கொண்ட நவீன கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் கட்டப்பட்டு வருகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு செயலாக்கத்திற்கு உரிய அனுமதி பெற, நகர சர்வே எண்.655, 656/2, 657 மற்றும் 658 உப்பிலிபாளையம் கிராமம் 6.24 ஏக்கர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ள நிலத்தினை நில உபயோகம் குடியிருப்பு என உள்ளதினை, கழிவுநீர் சுத்திகரிப்பு நில உபயோகம் என மாற்றித் தர பார்வை 2-ல் கண்ட கடிதத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரிய சுற்றுச்சூழல் பொறியாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நகர அளவை பதிவேடுகளில் தமிழ்நாடு கழிவுநீர் வடிகால் வாரியம் நில உபயோகம் என உள்ளது. முழுமை திட்டத்தின்படி குடியிருப்பு பகுதி என உள்ளதினை மாற்றி கழிவுநீர் சுத்திகரிப்பு நில உபயோகம் என மாற்றம் செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்பட்டதில் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழு தீர்மானம் எண்.75 நாள். 03.09.2009 –யில் "நகரமைப்புக் குழுவால் இடம் நேராய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட இடத்தில் கட்டப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நவீன முறையில் கட்டப்படுவுதால் அதன் மூலம் அருகில் உள்ள சமீபத்தில் அபிவிருத்தியான குடியிருப்பு பகுதிகளுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என கருதுவதாலும், கோவை மாநகரின் பொது சுகாதார நலனை முன்னிட்டு பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்தும் வகையில் பொருளில் குறிப்பிட்ட இடத்தினை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஏதுவாக விவசாய நில உபயோகமாக மாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்ற மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றி உள்ளதன் அடிப்படையில் இப்பொருள் மாமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.7921/2009/எம்.எச்5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 74 நாள் 30.9.2009</u>

கோயம்புத்தூர் மாநகர முழுமைத் திட்டம் தயார் செய்யப்படுவதற்கு முன்பே கோயம்புத்தூர் மாநகராட்சிக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பொருளில் குறிப்பிட்ட இடத்தை நில ஆர்ஜிதம் செய்து, கழிவு நீரேற்று நிலையம் அமைத்து, நாளதுதேதி வரையில் அச்செயல்பாட்டில் இருந்து வருவதால் முழுமைத் திட்டத்தில் தவறுதலாக குடியிருப்புப் பகுதி என குறிப்பிடப்பட்டதை விவசாய நில உபயோகமாக மாற்றம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

கோவை மாநகராட்சி, தெற்குமண்டலம் உக்கடம் பகுதியில் கழிவுநீர் பண்ணை வளாகத்தில் கோயம்புத்தூர் கிராமம் நகரளவு எண்கள் 57, 58/1, 58/2, 59/1, 59/3, 60/1, 60/3, 93, 95, 96/1, 96/2, 97/1, 97/2, 98/2, 99, 100/1, 100/2, 100/3, 101, 102/1, 102/2, 103/1, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 120, 121, 122, 123, 124, 125, 126, 127, 128, 129/2, 130/2, 131/2, 132/2, 133, 134/2, 135, 136, 137, 138, 139/1, 139/2, 140/2, 141/1, 141/2, 142, 143, 144, 145, 146/2, 146/3, 147/2, 148/1, 149, 150, 151, 152, 153/1, 154, 158, 159, 160, 168, 169/1-ல் 122.0 ஏக்கர் நிலம் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்டதாகும்.

இதில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க க.ச.எண். 147/2pt, 148/1pt, 153pt, 159pt, 169pt –லில் 13.09 ஏக்கர் நிலமும் மற்றும், திடக்கழிவு மாற்று நிலையம் அமைக்க 2.72 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 15.81 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. முழுமைத் திட்டப்படி இந்நிலங்கள் விவசாய உபயோகமாக உள்ளது. அதனை அவ்வாறே நிலை நிறுத்தலாம். தவிர மீதமுள்ள 106.19 ஏக்கர் நிலத்தில் 15 ஏக்கர் நிலம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு BSUP திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்சமயம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மாமன்ற ஒப்புதலுடன் 58.50 ஏக்கர் நிலம் மாநகராட்சியால் செயல்படுத்த உள்ள BSUP திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் தயார் செய்துள்ள திருத்திய மனைப்பிரிவு மற்றும் கட்டிட வரைபடத்தின்படி கூடுதலாக 22.16 ஏக்கர் நிலம் கூடுதலாக தேவைப்படுவதால் அதனையும் சேர்த்து 80.66 நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 58.50 ஏக்கர் நிலத்தை ஏற்கெனவே அரசானை எண். (2டி) எண் 1143 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் ( நவ 4-1 ) துறை நாள் 19.09.2008-ன்படி விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 22.16 ஏக்கர் நிலத்தையும் குடியிருப்பு நில உபயோகமாக மாற்ற வேண்டும். இதர பணிகளான ஆடு அறுவைமனை, மீன் சந்தை, பள்ளி, அஞ்சல் நிலையம், போன்ற திட்ட பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10.53 ஏக்கர் நிலத்தையும், ஆக மொத்தம் ( 22.16+10.53 ) = 32.69 ஏக்கர் நிலத்தை குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய வேண்டும்.

எனவே மேலே குறிப்பிட்டுள்ள விவரப்படி 32.69 ஏக்கர் நிலத்தை விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்யவும், இப்பகுதியை பல அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u> -ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 8025/2009/எச்1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 75 நாள் 30.9.2009**

பொருளில் குறிப்பிட்ட சர்வே எண்களில் உள்ள மொத்த நிலமான 122 ஏக்கரில் 15.81 ஏக்கர் நிலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை மாற்று நிலையம் அமைக்கவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அதனை விவசாய நில உபயோகமாக நிலை நிறுத்தவும், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட 15.0 ஏக்கர் நிலம் மற்றும் மாநகராட்சியின் BSUP திட்டப்பணிக்கு ஒதுக்கிய 58.5 ஏக்கர் நிலம், ஆக மொத்தம் 73.5 ஏக்கர் நிலத்தை ஏற்கனவே குடியிருப்பு நில உபயோகமாக மாற்றப்பட்டுள்ள நிலையில், தற்சமயம் BSUP திட்டப்பணிகளுக்கு கூடுதலாக ஒதுக்கிய மீதமுள்ள 32.69 ஏக்கர் நிலத்தை முழுமைத் திட்ட விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோகமாக மாற்றவும், கழிவுநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கு மேலே விவரித்தபடி 15.81 ஏக்கர் நிலமும், குடிசை மாற்று வாரியத்திற்கு வழங்கிய 15.0 ஏக்கர் நிலம் ஆக மொத்தம் 30.81 ஏக்கர் நிலம் தவிர்த்து மீதமுள்ள 91.19 ஏக்கர் நிலத்தை பல அடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 54 S.F. No.109, 110, 111, 112, 121, 122, 123, 108 பாகம், 107 பாகம், 114 பாகம், 113 பாகம், 120 பாகம், 119 பாகம் மற்றும் 124 பாகம் கோயம்புத்தூர் ரூரல் கிராமத்தில் உள்ள இடம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அடுக்கு மாடி தொகுப்பு வீடுகள் கட்ட உத்தேசித்து கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

கட்டிட விவரங்கள்

| பிளாக் | தொகுப்புகள் | அடுக்குகள் குடியிருப்பு எண்ணிக்கை | ஒருதளத்தில் குடியிருப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| A | 21 | 6 | 24 | 3024 |
| B | 3 | 6 | 16 | 288 |
| C | 1 | 6 | 12 | 72 |
| மொத்த உத்தேச குடியிருப்புகள் | | | | 3384 |

G.O.2D nos 117 Housing and Urban Development (UD4-1) Department, Date: 26.2.2008 ன்படி, S.F.No.107 பாகம், 108 பாகம், 109 to 112,113 பாகம், 114பாகம், 119 பாகம், 120 பாகம் 121 to 123 மற்றும் 124 பாகம் கோயம்புத்தூர் ரூரல் கிராமம் நிலப்பரப்பை விவசாயப்பகுதியில் இருந்து குடியிருப்புப் பகுதியாக பயன்பாடு மாற்றப்பட்டுள்ளது. மேற்படி 15.00 ஏக்கர் இடம் கோவை மாநகராட்சியிடம் இருந்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

PC50% அனுமதிக்கலாம்: 51.86%உத்தேசிக்கப்பட்டுள்ளது FS:1.5அனுமதிக்கலாம்: 2.95 உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டிடம் தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது, கட்டிடத்தின் உயரம் 16.20 மீ உத்தேச கட்டிடத்தின் உயரம் 15 மீட்டருக்கும் அதிகமாக உள்ளதால் பலஅடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டும் பகுதியாக அறிவிப்பு பெறப்பட வேண்டும். உத்தேச மனையிடத்தின் முன்புறமுள்ள 60.0 அகல திட்ட சாலை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பராமரிப்பில் உள்ளது. இச்சாலையை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு மாற்றப்பட வேண்டும்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மேற்படி பகுதியை பலஅடுக்கு மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக மாற்றம் செய்ய கேட்டுள்ளார்கள். எனவே S.F.No.107 பாகம், 108 பாகம், 109 to 112, 113 பாகம், 114பாகம், 119 பாகம், 120 பாகம் 121 to 123 மற்றும் 124 பாகம் கோயம்புத்தூர் ரூரல் கிராமத்தில் அமைந்துள்ள இடத்தை பலஅ டுக்கு மாடிக்கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்வது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண். 4178/09/எச்.1(S)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 76 நாள் 30.9.2009**

பொருளில் குறிப்பிட்டுள்ள நிலத்தை பல அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்

---

## பொருள் எண் 5

மத்திய அரசின் கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியால் ரூ.377.13 கோடி மதீப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசானை (3ப) எண் 25 ந.நி.கு.வ. (ந.நி.3) துறை நாள் 24.10.2007 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு திட்டப்பணிகள் ஆறு (6) சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு அதில் சிப்பம் 6 ஆம் பகுதிப் பணியான ஒண்டிப்புதுார், சிங்காநல்லுார் கிராமப் பகுதியில் 60 எம்.எல்.டி கொள்ளளவு திறன் கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கான நிலம் மாநகராட்சி வசம் இல்லாததால் தனியார் நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்பேரில் ஒண்டிப்புதுார், சிங்காநல்லுார் கிராமப் பகுதியில் தனியாருக்கு சொந்தமானதும் புல எண்கள் 758/1 பா, 758/ 2 பா, 761/ 3ஏ, 761/ 3பி, 761/3சி, 761/3டி, 762/2, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/ 4, மற்றும் 762/5-க்கு சம்பந்தப்பட்டுள்ள 14.40ஏக்கர் நிலத்தினை தேர்வு செய்து கையகப்படுத்தி நவீன சுத்திரிப்பு நிலையம் அமைக்க முடிவுசெய்யப்பட்டது. அதற்கான முன்மொழிவுகள் மாமன்றத் தீர்மான எண் 253, நாள் 21.01.2008 ஒப்புதலுடன் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கடந்த 26.07.2008-ல் அனுப்பப்பட்டதில் மாநகராட்சி கையகப்படுத்தப்பட வேண்டிய 14.40 ஏக்கர் நிலத்தில் புல எண். 762/4ஐ, தவிர மற்ற அனைத்து நிலங்களும் புன்செய் நிலங்கள் எனவும் புல எண். 762/4ல் உள்ள 0.05 ஏக்கர் நிலம் ''அரசு இட்டேரி புறம்போக்கு'' எனவும் வகைப்பாடு செய்யப்பட்டு கையகப்படுத்துவதற்கான செலவின தொகை கீழ்க்கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையாளரால் நில எடுப்பு சட்டம், 1894 அவசரப்பிரிவு 17(2)-ன் படி கையகப்படுத்த அனுமதியளிக்கப்பட்டது.

| | |
|---|---|
| வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிலத்தின் தோராய மதிப்பு | ரூ. 12,65,73,500/- |
| கட்டிடம் மற்றும் மரத்தின் மதிப்பு | ரூ. 35,150/- |
| மொத்தம் | ரூ. 12,66,08,650/- |
| 30% ஆறுதல் தொகை | ரூ. 3,79,82,595/- |
| 14.5% நிர்வாக செலவுத் தொகை | ரூ. 1,83,58,254/- |
| விளம்பரத்தொகை | ரூ. 25,000/- |
| மொத்தம் | ரூ. 18,29,74,499/-<br>அல்லது<br>ரூ. 18,29,74,500 |

ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்திற்கென அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ.377.13 கோடியில், நிலம் கையகப்படுத்துவதற்கான தொகை அடங்கவில்லை என்பதால், இச்செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியும் நிலத்தினை கையகப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியும் தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 236, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ம.ந.2) துறை நாள் 01.12.2008 -ல் அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நில மதிப்பினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலுத்தி கையகப்படுத்த மாமன்ற ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 309 நாள். 24.12.2008-ல் 14.40 ஏக்கர் நிலத்திற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நில மதிப்பு தொகை அப்பகுதியில் நிலவிவரும் வெளிச்சந்தை விலையோடு ஒப்பீடு செய்கையில் மிகவும் அதிகமாக இருப்பதாக கருதி மீண்டும் விலை நிர்ணயம் குறித்த அனைத்து ஆய்வுகனையும் விதிமுறைகளின்படி பின்பற்றி மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற தீர்மானிக்கப்பட்டது.

17.9.2009 அன்று நடைபெற்ற மாமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்பக் கமிட்டி பரிந்துரை செய்த இடத்தை ஆர்ஜிதம் செய்யலாம் எனவும் நிலத்தின் மதிப்பு அதிகமாக உள்ளதால் இட உரிமையாளர்களை விலை குறைப்பு சம்பந்தமாக நேரில் அழைத்துப் பேசுமாறும், வருகின்ற மாமன்றக் கூட்டத்தில் இப்பொருளை பரிசீலனைக்கு வைக்குமாறும் மேற்படி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நில உரிமையாளர்களுடன் 8.5.2009, 11.7.2009 மற்றும் 16.9.2009 ஆகிய தேதிகளில் நேரடி பேச்சுவார்த்தை நடத்தியதில், தாங்கள் இந்நிலம் மூலம் பெரிய நஷ்டத்திற்குள்ளாகியுள்ளதால் நிலக்கிரயத் தொகையை குறைக்க வழியில்லை எனவும், அரசு நிர்ணயித்த நிலக்கிரயத் தொகையை வழங்குமாறு தெரிவித்தனர்.

எனவே தற்சமயம் நில ஆர்ஜித நடவடிக்கையில் உள்ள நிலத்தையே தொழில்நுட்பக் கமிட்டி பரிந்துரை செய்துள்ளதால் மேலே குறிப்பிட்ட அரசாணையில் பெறப்பட்ட நிர்வாக ஒப்புதலின்படி மேற்படி நிலத்தை நில ஆர்ஜிதம் செய்யவும், மேலே பொருளில் விவரிக்கப்பட்டபடி ஆகும் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>அலுவகக்குறிப்பு</u>- ஒப்புதல் வழங்கலாம் . ந.க.எண் . 12069/06/MH5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 77 நாள் 30.9.2009</u>

அலுவலக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

பொருள்- கோவை மாநகராட்சி - மேற்கு மண்டலம் வார்டு எண்.53 செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் புதியதாக சமுதாய கூடம் கட்டப்பட்டுள்ளது - பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல் - தொடர்பாக.

---

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.53 செல்வபுரம் வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் புதிதாக சமுதாய கூடம் தரைத் தளம் 2166 ச.அடி. மற்றும் முதல் தளம் 1927 ச.அடியில் கட்டப்பட்டுள்ளது. பொது மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு கட்டிடத்திற்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பின்படி தின வாடகை ரூ.1500- என பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் வைப்புத் தொகையாக ரூ5000-ம் பெற்று பின்னர் திரும்ப வழங்கவும் ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாய கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்கவும், மற்றும் நாடாளுமன்ற தேர்தல் 2009 அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்ததால் அவசர அவசியத்தை முன்னிட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று சமுதாய கூடம் வாடகைக்கு அளிக்கப்பட்டதை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு ஏற்கனவே 08.09.09-ந் தேதியன்று பொருள் வைக்கப்பட்டது. அதில் சமுதாய கூடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தின வாடகை மற்றும் வைப்புத் தொகை அதிகமாக இருப்பதினால் தீர்மான எண்.66 நாள் 11.09.09-ன்படி மீண்டும் ஆய்வு மேற்கொண்டு மாமன்றத்திற்கு பொருள் வைத்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

17.09.09-ந் தேதி அன்று அனைத்து மாமன்ற கட்சி தலைவர்கள் கூட்டம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் மேற்கு மண்டலத்திற்குரிய சமுதாய கூட வாடகை நிர்ணயம் அதிகப்படியாக இருப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. அதில் ஒரு தளத்திற்கு தின வாடகையாக ரூ.500- வசூலிப்பது எனவும் இரண்டு தளங்கள் உள்ள சமுதாய கூடத்திற்கு ரூ.1000- வாடகையாக நிர்ணயம் செய்யலாம் என்றும் வைப்புத் தொகை ரூ.2500- வசூலிக்கலாம் எனவும் விவாதிக்கப்பட்டுள்ளது.

கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டிடத்தை பராமரிக்க குறைந்தது கட்டிட மதிப்பில் 10% தொகையாவது செலவிட வேண்டி உள்ளதால் இந்த நிலையை அனுசரித்து மாமன்றம் வாடகையை முடிவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.2565/08/டி1(மே)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 78 நாள் 30.9.2009</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சமுதாயக் கூடத்திற்கு தினவாடகையாக ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிர்ணயம் செய்தும், வைப்புத் தொகையாக ரூ. 2500/- (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) நிர்ணயம் செய்தும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

பொருள்- கோவை மாநகராட்சி - மேற்கு மண்டலம் வார்டு எண்.51 தடாகம் ரோடு வாழைக்காய் மண்டியில் புதியதாக சமுதாயக் கூடம் கட்டப்பட்டது - பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்துதல் - தொடர்பாக.

----------------------

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.51 தடாகம் ரோடு வாழைக்காய் மண்டியில் புதிதாக சமுதாய கூடம் 2495- ச.அடியில் கட்டப்பட்டுள்ளது. பொது மக்கள் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தும் பொருட்டு கட்டிடத்திற்கு தற்போதைய வழி காட்டி மதிப்பின்படி தின வாடகை ரூ.2360- என பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படடது. மேலும் வைப்புத் தொகையாக ரூ.5000-ம் பெற்று பின்னர் திரும்ப வழங்கவும் ஏற்கனவே உள்ள விதிமுறைகளின்படி சமுதாய கூடத்தை பயன்பாட்டிற்கு அளிக்கவும் மாமன்றத்திற்கு ஏற்கனவே பொருள் 08.09.09-ந் தேதியன்று வைக்கப்பட்டது. அதில் சமுதாய கூடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தின வாடகை மற்றும் வைப்புத் தொகை அதிகமாக இருப்பதினால் தீர்மான எண்.66 நாள் 11.09.09-ன்படி மீண்டும் ஆய்வு மேற்கொண்டு மாமன்றத்திற்கு பொருள் வைத்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

17.09.09-ந் தேதி அன்று அனைத்து மாமன்ற கட்சி தலைவர்கள் கூட்டம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் மேற்கு மண்டலத்திற்குரிய சமுதாய கூட வாடகை நிர்ணயம் அதிகப்படியாக இருப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. அதில் ஒரு தளத்திற்கு தின வாடகையாக ரூ.500- வசூலிப்பது எனவும் இரண்டு தளங்கள் உள்ள சமுதாய கூடத்திற்கு ரூ.1000- வாடகையாக நிர்ணயம் செய்யலாம் என்றும் வைப்புத் தொகை ரூ.2500- வசூலிக்கலாம் எனவும் விவாதிக்கப்பட்டுள்ளது.

கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டிடத்தை பராமரிக்க குறைந்தது கட்டிட மதிப்பில் 10% தொகையாவது செலவிட வேண்டி உள்ளதால் இந்த நிலையை அனுசரித்து மாமன்றம் வாடகையை முடிவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 10845/ 2008/ டி1 மே

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 79 நாள் 30.9.2009</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள சமுதாயக் கூடத்திற்கு தினவாடகையாக ரூ. 500/- (ரூபாய் ஐந்நூறு மட்டும்) நிர்ணயம் செய்தும், வைப்புத் தொகையாக ரூ. 2500/- (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) நிர்ணயம் செய்தும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள் - கடைகள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட அவினாசி ரோடு வணிக வளாகம் - கடை எண். 23 - ஒதுக்கீடு தொடர்பாக.

பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 2 நாள். 7.09.09

----------------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட அவினாசி ரோடு வணிக வளாகம் கடை எண்.23-க்கு 18.06.2009 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. இதில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டுள்ளது.

<u>அவினாசி ரோடு வணிக வளாகம்</u>

| வ.எண். | கடை எண் | ஏலதாரர் பெயர் | கடையின் அளவு | உயர்ந்தபட்ச வாடகைத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 23 | M.A. சபேர் அலி | 120 ச.அடி | 9550/- |

எனவே மேற்படி கடைகளுக்கு உயர்ந்தபட்ச வாடகை நிர்ணயம் செய்து கடைகளை ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், மேற்படி வணிக வளாகக்கடைகளை பொதுஏலம் விடுவதற்கான ஏல அறிக்கையினை நாளேடுகளில் விளம்பரம் செய்து இவைகளுக்கான செலவினங்களை ஏற்பதற்கும் மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க. எண். 1712/08/அ10

**மாநகர மன்ற தீர்மானம் எண் 80 நாள் 30.9.2009**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 2 நாள் 7.9.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**பொருள் எண் 9**

**பொருள் - கடைகள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட ரங்கே கவுண்டர் வீதி வணிக வளாகம் - கடை எண். 1 முதல் 5 வரை - ஒதுக்கீடு தொடர்பாக.**

**பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 1 நாள் 07.09.2009.**

**கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட ரங்கே கவுண்டர் வீதி வணிக வளாகம் கடை எண். 1 முதல் 5 வரை உள்ள கடைகளுக்கு பொதுப்பணி துறையின் மூலம் சதுரஅடிக்கு ரூ.18 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 18.06.2009 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று கீழ் குறிப்பிட்டுள்ள ஏலதாரர்கள் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்பள்ளி தொகை கோரியுள்ளனர்.**

## ரங்கே கவுண்டர் வீதி வணிக வளாகம்

| வ.எண். | கடை எண் | ஏலதாரர் பெயர் | கடையின் அளவு | உயர்ந்தபட்ச வாடகைத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 1 | I. சிலுவை முத்துக்குமார் | 160 ச.அடி | 3550/- |
| 2 | 2 | A. ஜான் செல்வநாதன் | 160 ச.அடி | 3300/- |
| 3 | 3 | S. மகேஸ்வரன் | 160 ச.அடி | 3250/- |
| 4 | 4 | V. விக்னேஸ் புகழ்வேந்தன் | 160 ச.அடி | 3100/- |
| 5 | 5 | B. கீதா சரவணன் | 128 ச.அடி | 3100/- |

**எனவே, மேற்படி கடைகளுக்கு உயர்ந்தபட்ச வாடகை நிர்ணயம் செய்து கடைகளை ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க. எண். 073/08/அ10**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 81 நாள் 30.9.2009**

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 1 நாள் 7.9.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**பொருள் எண் 10**

**பொருள் - கடைகள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட திரு.வி.க.மார்க்கெட் வணிக வளாகம் - கடை எண்.1 முதல் 23 வரை – ஒதுக்கீடு தொடர்பாக.**

**பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 3 நாள் 07.09.2009.**

**கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட திரு.வி.க. மார்க்கெட் வணிக வளாக கடை எண் 1 முதல் 23 வரை உள்ள கடைகளுக்கு பொது பணி துறையின் மூலம் சதுரஅடிக்கு ரூபாய். 23.28 என்றும் 48 சதுரஅடிக்கு (6”x8”) கடை ஒன்றுக்கு ரூபாய் 1118/- நிர்ணயம் செய்யப்பட்டு உயர்நீதி மன்ற தீர்ப்பின் படி 03.02.2009 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்று கீழ் குறிப்பிட்டுள்ள ஏலதாரர்கள் உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்பள்ளி தொகை கோரியுள்ளனர்.**

## திரு.வி.க. மார்க்கெட் வணிக வளாகம்

| வ.எண். | கடைஎண் | ஏலதாரர் பெயர் | கடையின் அளவு 6”x 8” | உயர்ந்தபட்ச வாடகை தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 1 | K.கிருஷ்ணன் | 48 ச.அடி | 1350/- |
| 2 | 2 | S.ஜெயா | 48 ச.அடி | 1375/ |
| 3 | 3 | A.S.செல்வராஜ் | 48 ச.அடி | 1400/ |
| 4 | 4 | M.சித்ரா மணி | 48 ச.அடி | 1400/ |
| 5 | 5 | V.மருதாசலம் | 48 ச.அடி | 1400/ |
| 6 | 6 | V.அன்பரசன் | 48 ச.அடி | 1250/ |
| 7 | 7 | R.வெங்கட்ராமன் | 48 ச.அடி | 2300/ (ஒ.பு) |
| 8 | 8 | R.வெங்கட்ராமன் | 48 ச.அடி | 2300/ (ஒ.பு) |
| 9 | 9 | B.அப்துல்லா | 48 ச.அடி | 2500/ |
| 10 | 10 | R.நளின் | 48 ச.அடி | 2100/ |
| 11 | 11 | R.நளின் | 48 ச.அடி | 2050/ |
| 12 | 12 | R.ராமசந்திரன் | 48 ச.அடி | 2100/ |
| 13 | 13 | C.A.நிகமத்துல்லா | 48 ச.அடி | 1450/ |
| 14 | 14 | K.ஹாரிகிருஷ்ணன் | 48 ச.அடி | 1600/ |
| 15 | 15 | C.A.நிகமத்துல்லா | 48 ச.அடி | 1600/ |
| 16 | 16 | S.நாஸர் | 48 ச.அடி | 1350/ |
| 17 | 17 | V.சரவணன் | 48 ச.அடி | 1500/ |
| 18 | 18 | காளிதாஸ் | 48 ச.அடி | 1500/ |
| 19 | 19 | ரவிச்சந்திரன் | 48 ச.அடி | 1500/ |
| 20 | 20 | K.R.சுரேஷ் | 48 ச.அடி | 1400/ |
| 21 | 21 | V.சரவணன் | 48 ச.அடி | 1350/ |
| 22 | 22 | M.A.சபேர் அலி | 48 ச.அடி | 1350/ |
| 23 | 23 | M.A.சபேர் அலி | 48 ச.அடி | 1375/ |

மேலே குறிப்பிட்டுள்ள உயர்ந்தபட்ச வாடகைத் தொகை வழங்கி உள்ளதில் வரிசை எண். 7, 8, 9, 10, 11 மற்றும் 12 ஆகிய கடைகளை ஏற்று ஒதுக்கீடு செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது. பிற கடைகளுக்கு மறுஏலம் கோரவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11956/08/அ10

### மாநகர மன்ற தீர்மானம் எண் 82 நாள் 30.9.2009

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 3 நாள் 7.9.09-ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

### பொருள் எண் 11

பொருள் :- பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்குகள் - கூடுதலாக ஒரு மாநகராட்சி வழக்கறிஞர் - நியமனம் செய்தல் - தொடர்பாக.

--------

கோவை மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளில் மாநகராட்சி தரப்பில் கோவை மாநகர மன்றத் தீர்மான எண். 384, நாள் 28.02.2002-ன்படி திரு. ஆர். சிவக்குமார் மற்றும் திரு. ஜே. சத்திய நாராயண பிரசாத் ஆகிய வழக்கறிஞர்கள் மாநகராட்சி சார்பாக ஆஜராகி வழக்குகளை நடத்தி வந்தனர்.

ஆணையாளர் அவர்களின் உத்திரவு ந.க.எண். 12115/2007/(எம்.சி.1)/ எம்.சி.10 நாள் 24.07.2009–ன்படி திரு. ஜே. சத்திய நாராயண பிரசாத் வழக்கறிஞரை மாநகராட்சி சம்மந்தப்பட்ட வழக்குகளில் இனிமேற்கொண்டு பொறுப்பு ஏற்க வேண்டாம் என உத்திரவிடப்பட்டுள்ளது. தற்போது மாநகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்து சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளையும் திரு. ஆர். சிவக்குமார் மாநகராட்சி வழக்கறிஞர் மட்டுமே நடத்திவருகிறார்.

கோவை மாநகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் அனைத்து மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து துறைகள் சம்பந்தப்பட்ட 232 வழக்குகள் நிலுவையில் உள்ளது. மேலும் 01.04.2008 பொது சீராய்வின் போது உயர்த்தப்பட்ட வரியை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் 71 வழக்குகள் மாநகராட்சிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆகவே, மேற்படி 300க்கும் அதிகமான வழக்குகளை கவனிக்கவும், எதிர்காலத்தில் வரக்கூடிய வழக்குகளை கவனிக்கவும் ஒரு மாநகராட்சி வழக்கறிஞரால் மட்டுமே இயலாது என்பதால் மாநகராட்சி சார்பில் ஆஜராக மேலும் ஒரு வழக்கறிஞரை கூடுதலாக நியமிக்க வேண்டியது அவசியமாகிறது.

கோவை மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளில் மாநகராட்சி வழக்கறிஞராக தன்னை நியமனம் செய்யுமாறு திரு.உ.கருணாகரன் வழக்கறிஞர் தனது 28.07.2009-ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார். இவர் எம்.ஏ.பி.எல்., சட்டப்படிப்பு முடித்துள்ளார். இவர் கடந்த 19 வருடங்களாக சென்னை உயர்நீதிமன்ற வழக்குகள், நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் மற்றும் பலதரப்பட்ட தீர்ப்பாயங்களில் வழக்குகளை நடத்தி வந்துள்ளார். முதுநிலை வழக்கறிஞர் திரு. மாசிலாமணி அவர்களிடம் இளநிலை வழக்கறிஞராக 1991 முதல் 1996 வரை பணிபுரிந்துள்ளார். மெஸர்ஸ். ஜி.எம்.மணி அசோசியேட்ஸ் அலுவலகத்தில் வழக்குகள் தயாரித்தல், தாக்கல் செய்தல், வாதாடுதல் ஆகிய எல்லாப் பணிகளையும் 1996 முதல் 2008 வரை செய்து வந்துள்ளார். அண்ணா பல்கலைக்கழகம், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் கதர் வாரியத்தின் நிலை வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நிலை வழக்கறிஞராக பணியாற்றியுள்ளார்.

ஆகவே கோவை மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர் நீதிமன்ற வழக்குகளில் திரு. ஆர். சிவக்குமார், மாநகராட்சி வழக்கறிஞருடன் கூடுதலாக திரு. உ. கருணாகரன் வழக்கறிஞரை மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம். ந.க.எண் :10439 / 2009/ எம்.சி.10

மாநகர மன்ற தீர்மானம் எண் 83 நாள் 30.9.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

பொருள் :- பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்குகள்-வழக்கின் முக்கியத்துவம் கருதி முதுநிலை வழக்கறிஞர்களிடம் ஒப்படைத்தல் - வழக்கு கட்டணம் வழங்குதல்-தொடர்பாக.

---------

சென்னை உயர்நீதிமன்றத்தில் அவ்வப்போது மாநகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகள் மற்றும் நடைபெற்றுவரும் வழக்குகளில் மாநகராட்சிக்கு எதிராக ஆஜராகும் முதுநிலை வழக்கறிஞர்களுக்கு இணையாக மாநகராட்சி சார்பிலும் அனுபவமிக்க முதுநிலை வழக்கறிஞர்களை நியமனம் செய்து வழக்குகளை நடத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே வழக்குகளின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதியும், மாநகராட்சியின் நலனைக் கருத்திற்கொண்டும், வழக்குகள் மாநகராட்சிக்கு எதிராக செல்வதை தடுக்கவும் முதுநிலை வழக்கறிஞர்களை நியமனம் செய்துகொள்ளவும், அவர்களுக்கான வழக்குக்கட்டணம் வழங்கவும் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -அனுமதிக்கலாம். ந.க.எண் :10439 /2009/ எம்.சி.10

மாநகர மன்ற தீர்மானம் எண் 84 நாள் 30.9.2009

அலுவலக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி எஸ். ஸ்டெல்லா ரோசி, பல நோக்கு சுகாதார பணியாளர், வி.வி.எம். ஹோம் நகர் நல மையம் - உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வி.வி.எம். ஹோம் நகர் நல மையத்தில் பல நோக்கு சுகாதாரப் பணியாளராக பணிபுரியும் திருமதி. எஸ். ஸ்டெல்லா ரோசி அவர்களுக்கு சொந்த ஊர் உடுமலைப்பேட்டை என்பதாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி எஸ். ஸ்டெல்லா ரோசி, பலநோக்கு சுகாதாரப் பணியாளரை உடுமலைப்பேட்டை நகராட்சியில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>- அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், உடுமலைப் பேட்டை நகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 5625/09/எம்.சி. 3

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 85 நாள் 30.9.2009</u>

அலுவலக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 14

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சியில் டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 1.10.2009 முதல் 31.03.2010 முடிய ஆறுமாத காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ. 5484/-ம் அதற்கான சேவைக் கட்டணம் 12% அதற்குரிய சேவை வரி கட்டணம் 12% கல்வி வரி கட்டணம் 3% வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் 30.09.2009 உடன் முடிவடைகிறது.

இதனைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை 1.10.2009 முதல் 31.03.2010 முடிய மேலும் ஆறுமாத காலத்திற்கு நீட்டிக்கும் பொருட்டு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி நேர பணிக்கு தினக்கூலி அடிப்படையில் மாத ஊதியம் ரூ. 8552/- (சேவைக் கட்டணம் 12% மற்றும் அதற்குரிய சேவை வரிக் கட்டணம் 12.36% உட்பட) மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு அவர்களது கடித எண். 6416/cbe/Texco நாள் 13.03.2009-ல் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இம்மாநகராட்சியில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தற்போது அவர்கள் கேட்டுக் கொண்டுள்ள கட்டண விகிதத்தில் 24 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்குட்பட்டு 01.09.2009 முதல் 31.03.2010 முடிய உள்ள ஆறுமாத காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணிபுரிய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 12,50,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - அனுமதிக்கலாம். ந.க.எண். 3497/07/(எம்சி5) எம்சி 7

### <u>மாநகர மன்ற தீர்மானம் எண் 86 நாள் 30.9.2009</u>

அலுவலக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுசுகாதாரப் பிரிவு - ஆண் பணியாளர்களுக்கும மற்றும் பெண் பணியாளர்களுக்கும் 2 ஜோடி சீருடை வழங்குவது – ஆண் பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டை மற்றும் அரைக்கை சட்டைக்கு பதில் முழுக்கால் சட்டை மற்றும் முழுக்கை சட்டை வழங்குவது தொடர்பாக.

பார்வை

1. அரசாணை (2டி) எண்.37 நாள். 14.05.99, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி-3) துறை
2. அரசாணை எண். (வாலாயம்) எண்.393 நாள்.16.09.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந2) துறை
3. அரசாணை எண்.50, கைத்தறி, காதி, (டி2) துறை நாள்.10.03.95
4. ஆணையாளர் அவர்களால் துப்புரவு ஆய்வாளர்களுக்கு 24.01.2009 – ம் தேதி நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகள்
5. ந.க.எண். 865/2009/எம்.இ.4 நாள்.16.7.2009

அரசாணை எண் (2டி) எண்.37 நாள். 14.05.99 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை உத்தரவுப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி, பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு செட் சீருடை, ஒரு ஜோடி செருப்பு, தலைப் பாகையும், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு பாலிஸ்டர் புடவையும், இரண்டு ஜாக்கெட், 1 ஜோடி செருப்பு மற்றும் டர்பன் துணி (தலைபாகை) மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை (வாலாயம் ) எண் 393 எண் 16.09.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந 2) துறையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்களுக்கு அரைக்கால் சட்டை சீருடைக்கு பதிலாக முழுக்கால் சட்டை சீருடை வழங்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி மலேரியா பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை சீருடை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண் 50, கைத்தறி, காதி, (டி2) துறை நாள். 10.03.95-ன்படி அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் கோஆப்டெக்ஸ், கைத்தறி தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், NTC போன்ற அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலமாக பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கான சீருடைகள் வாங்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலும் இருந்து வருகிறது.

அரசு ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி மாநகராட்சி ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ.100-ம் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தைப்பதற்கு ரூ.20-ம் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

ஆணையர் அவர்களால் வழங்கிய அறிவுரைகளின்படி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மாநகராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை தனித்தனியாக சேகரிக்க குப்பை கூடைகள் (Dust Bin) வழங்கப்பட்டுள்ளது. துப்புரவு பணியாளர்கள் வீடு வீடாக சென்று மக்கும் குப்பை, மக்காத குப்பையை தனித்தனியாக பிரித்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சேகரிக்கும் பணியை செய்ய உள்ளார்கள். அவர்களின் உடல் நலத்தை கருத்தில் கொண்டு அரைக்கால் சட்டை, அரைக்கை சட்டை சீருடைக்கு பதிலாக முழுக்கால் சட்டை, முழுக்கைச்சட்டை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கவும் தையற்கூலி மாநகராட்சி நிதியிலிருந்து ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு ரூ.200-ம், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட்டுக்கு தைப்பதற்கு ரூ.40-ம் வழங்கவும் இத்தொகையினை நேரடியாக துப்புரவு பணியாளர்களிடம் வழங்காமல் தனியார் நிறுவனங்கள் மூலம் சீருடை தைத்து வழங்கவும், அரசின் அனுமதி வேண்டி கருத்துரு பார்வை 5-ல் கண்ட கடிதத்தின்படி அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 15.09.2009 அன்று நடந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆணையாளரால் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி 2009-10 ஆண்டுக்கு துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கும் சீருடைகளை ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு முழுக்கால் சட்டை மற்றும் முழுக்கை சட்டையாக அரசின் உத்தரவை எதிர்நோக்கி வழங்கவும், ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு ரூ.200-ம் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட்டுக்கு ரூ.40 ம் தையற்கூலியாக வழங்கலாம்.

துப்புரவு பணியாளர்களுக்கு சீருடை வழங்குவதற்கு ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. 2009-10 நிதியாண்டில் ரூபாய் 50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அலுவலகக்குறிப்பு-</u> மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண். 865/2009/எம்.இ4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 87 நாள் 30.9.2009</u>

ஆண் துப்புரவுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அரைக்கால் சட்டை மற்றும் அரைக்கை சட்டைக்குப் பதிலாக முழுக்கால் சட்டை மற்றும் முழுக்கை சட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

ஆண் துப்புரவுப் பணியாளர்களுக்கு தையற் கூலியாக 1 செட் சீருடைக்கு ரூ. 200/- (ரூபாய் இருநூறு மட்டும்) வழங்கவும், பெண் துப்புரவுப் பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட்டுக்கு ரூ. 40/- (ரூபாய் நாற்பது மட்டும்) தையற் கூலியாக வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

சீருடை மற்றும் தையற்கூலி செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்-33ல் உள்ள அழகப்பா சாலையிலுள்ள டாடாபாத் நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் மதிப்பீடு ரூ.25.00 லட்சம் செலவில் கட்ட மாமன்றம் தனது தீர்மானம் எண் 227 நாள் 29.08.08-ல் அனுமதி அளித்தது. இப்பணிக்கு மூன்றாவது முறையாக 20.01.2009ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் திரு.எஸ். துரைராஜ் அவர்கள் ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு 2.20% மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருந்தார். ஒப்பந்ததாரர் திரு.எஸ். துரைராஜ் அவர்களின் கூடுதலான 2.20% மதிப்பீட்டை கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மாமன்றம் தனது தீர்மான எண்.5 நாள் 22.06.09ல் அனுமதி அளித்துள்ளது.

தற்போழுது இந்த நடுநிலைப் பள்ளியில் 177 மாணவர்களே படித்து வருகிறார்கள். இப்பள்ளியில் 19 வகுப்பறைகள் உள்ளன. இவற்றில் 6 அறைகளில் மட்டும் மாணவர்களுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 13 அறைகள் தலைமை ஆசிரியர் அலுவலகம், இருப்பறை, கணிணி அறை, இரு வகுப்பறைகள், சர்வசிக்ஷா அப்யான் திட்ட செயலாக்கம், வளர்கல்வி மற்றும் நூலகத்திற்கான ஒரு வகுப்பறை செயல்பட்டு வருகிறது. அதுதவிர மேலும் 5 (ஐந்து) அறைகள் உபயோகமின்றி உள்ளது.

பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான வகுப்பறைகள் இருப்பதுடன் கூடுதலாக ஐந்து வகுப்பறைகள் பயன்பாடின்றி, உபயோகப்படுத்தும் நிலையில் உள்ளதால் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் தேவையில்லையென ஆய்வில் தெரியவருவதால், மேற்படி மாமன்ற திர்மானம் எண்-5 நாள் 22.06.09ன்படி கூடுதலாக 6 (ஆறு) வகுப்பறைகள் கட்டுவதற்கு திரு.எஸ். துரைராஜ் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி உள்ளதை ரத்து செய்வது குறித்து மாமன்றம் முடிவு செய்ய பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு-</u>

தேவைக்கு அதிகமாக வகுப்பறைகள் உபயோகமற்ற நிலையில் இருப்பதால் புதியதாக கட்ட உத்தேசித்துள்ள 6 (ஆறு) கூடுதல் வகுப்பறைகள் கட்டும் மதிப்பீடுக்கான நிர்வாக அனுமதியினை ரத்து செய்யவும், ஒப்புதல் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 11134/08/எம்.டி.2 (டி.1.வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 88 நாள் 30.9.2009**

பொருளில் உள்ள பள்ளியில், தற்போது மைதானத்தில் நிலையில் உள்ள பள்ளிக் கட்டிடத்தின் ஸ்திரத் தன்மை (Stability) குறித்து தொழில் நுட்ப ஆலோசனை பெறவும், வணக்கத்திற்குரிய மேயர் தலைமையில் குழு அமைத்து பள்ளியினை நேரடி ஆய்வு மேற்கொண்டு மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகரம், விளாங்குறிச்சி கிராமம் சர்வே எண்கள் 426/1, 426/2, 427/1, 427/2, 436, 437, 438, 439/1, 440, 458/2, 459/2, 461/3, 462/4, 463/4, 465/4, 466/4-இல் உள்ள 61.59 ஏக்கர் நிலத்தில் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைக்க நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களால் மனைப்பிரிவு அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவு பகுதி முழுவதும் சிறப்பு பொருளாதார மண்டலமாக செயல்பட உள்ளது. இம்மண்டலத்திற்குள் டைடல் பார்க், விப்ரோ போன்ற பல தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களை அமைக்க உள்ளனர். தற்சமயம் விப்ரோ நிறுவனம் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது.

எனவே மேற்படி தொழில் நுட்ப பூங்கா முழுவதிலும் உரிய அத்தாரிட்டியில் அனுமதிக்கப்படும் உயரம் வரை இதர விதிகளுக்குட்பட்டு 18.85 மீ. உயரத்தில் பல அடுக்கு மாடிக் கட்டிடங்கள் கட்டிக் கொள்வதற்கு ஏற்ப மேற்படி பகுதியை பல அடுக்கு மாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க கோரும் இப்பொருள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> -அனுமதிக்கலாம் ந.க.எண் 12096/2008/H2(N)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 89 நாள் 30.9.2009**

அலுவலக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப பூங்கா சாலையினை பொதுமக்கள் உபயோகிக்கும் வகையில் தண்ணீர்பந்தல் சாலையுடன் இணைக்க அரசினைக் கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 18

பொருள்- மனுதாரர் அ.அருண்மொழி மாணிக்கம், (Chief Executive Officer and Authorised Signatory) ஹால் மார்க் ஹாஸ்பிடாலிட்டி பி.லிட் (லட்சுமி டவர்) மேட்டுப்பாளையம் ரோடு பழைய சர்வே வார்டு எண்.11 கே, பழைய டி.எஸ்.எண்.4/3B, புதிய டி.எஸ்.எண்.4/5, கதவு எண்.257, மேட்டுப்பாளையம் ரோடு – பலமாடி வணிகக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க கோரிய விண்ணப்பம் - தொடர்பாக.

-----

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.34, நகரளவு வார்டு எண்.11கே, நகரளவு எண்.4/5, கதவு எண்.257, மேட்டுப்பாளையம் ரோடு, சாயிபாபா காலனி பகுதி லட்சுமி டவர் வளாகப் பகுதியினை "பலமாடி கட்டிட பகுதியாக" பிரகடனம் செய்து உத்திரவு வழங்கும்படி விண்ணப்பம் செய்துள்ளார்.

நிலையில் உள்ள கட்டிடம் BA No.34/05/H9, BL 15/95/H9 கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. கிழக்குப்புற பிளாக் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் தரை மற்றும் மூன்று தளங்களுக்கு கூடுதலாக நான்கு மற்றும் ஐந்து தளங்கள் கட்டப்பட்டுள்ளது. மேற்குப் புறத்தில் தரை மற்றும் இரண்டு தளங்கள் கட்டப்பட்டுள்ளது. நிலையில் உள்ள கட்டிடத்திற்கு மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி 2008-09 (2) ரூ.15,06,677/- செலுத்தப்பட்ட விவரம் இணைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் கிழக்குப்புற தரை மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட கட்டிடத்தை நிலை நிறுத்தியும், மேற்குப்புறத்தில் நிலையிலுள்ள கட்டிடத்தை அப்புறப்படுத்திவிட்டு 10% பொது ஒதுக்கீட்டு இடம் உத்தேசம் செய்து, தரை மற்றும் ஐந்து தளங்கள் கொண்ட புதிய கட்டிடம் கட்ட உத்தேசித்தும் வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் உத்தேச மறு கட்டுமானத்திற்கு தேவையான குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி மேட்டுப்பாளையம் சாலையில் அமையப் பெற்றுள்ளது. புதிய DCR விதிகளின்படி அட்டவணை தயார் செய்யப்பட்டு விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

மனுதாரா் மனையிடம் அமையும் மேட்டுப்பாளையம் சாலை, கோவை மாநகராட்சி மாமன்றத்தின் தீா்மான எண்.553 நாள்.30.07.85-ன்படி பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த மன்ற தீா்மானத்தின் ஒளி நகல் மற்றும் கோயம்புத்தூா் உள்ளூா் திட்டக் குழுமம் தீா்மான எண்.22/2000 ஒளி நகல் நாள்.14.3.2000 இணைக்கப்பட்டுள்ளது.

மனுதாரா் மனையிடம் இரயில்வே எல்லையில் இருந்து 30 மீ இடைவெளி இல்லை. இது தொடா்பாக இரயில்வே துறையிடம் தடையின்மை பெறப்பட வேண்டும்.

மனுதாரா் நிலையில் உள்ள கிழபுற தரை மற்றும் இரண்டு தளங்களை கொண்ட வணிக கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி விடுவதாக உறுதிமொழி பத்திரம் ரூ.50/- முத்திரை தாளில் சமா்ப்பித்துள்ளாா்.

ஏற்கனவே மனுதாரா் கட்டிடம் கட்டிட வரன்முறைப் படுத்தும் திட்டத்தில் 30-12-2002-ல் இந்தியன் வங்கி காசோலை எண்.517438-ல் ரூ.2,21,875/-ம் மற்றும் காசோலை எண்.699450 நாள்.30.12.2002-ல் ரூ.3550/-ம் மாநகராட்சியில் செலுத்தி அனுமதியற்ற கட்டிடத்தை நெறிமுறைப்படுத்த சமா்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சென்னை உயா்நீதிமன்ற தடை காரணமாக நிலுவையில் உள்ளது.

ஏற்கனவே மனுதாரா் 16.09.98-ல் சமா்ப்பித்த மேல்முறையீட்டு மனு மீது நகா் ஊரமைப்பு இயக்குநா் "கோவை மாமன்றம் 30.07.85-ல் இயற்றிய தீா்மான எண்.553 நகா் ஊரமைப்பு இயக்குநா் ஒப்புதல் பெறப்பட்டு தமிழ்நாடு அரசிதழ்களில் பிரசுரம் செய்யப்படவில்லை என்றும், மனுதாரா் மனுமீது மன்றத்தில் கட்டிட உயரம் குறிப்பிட்டு தனித் தீா்மானம் புதிதாக பெற்று மீண்டும் சமா்ப்பிக்கும்படி" கோவை உள்ளூா் திட்டக் குழுமம் உறுப்பினா் செயலா் தன் ந.க.எண்.2206/1999 உதிகு-1 நாள்.4.8.2004-ல் கேட்டுக் கொண்டுள்ளாா்.

அதன்படி மனுதாரா் மறு உத்தேசம் செய்து மீண்டும் புதிதாக கட்டிடம் கட்ட உயரம் குறிப்பிட்டு பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக தங்கள் இடத்தை அறிவிக்கக் கோரி 18.04.2007-ல் புதிதாக மனு கொடுத்துள்ளாா்.

மனுதாரா் 10% பொது ஒதுக்கீடு இடம் உத்தேச பலமாடி கட்டிடத்தின் நுழைவு பகுதியிலும், மேட்டுப்பாளையம் ரோட்டினை ஒட்டியும் விடுவதாக உத்தேசித்துள்ளாா். இரண்டு பேஸ்மெண்ட் தளங்கள் வாகன நிறுத்துமிடமாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகா் ஊரமைப்பு இயக்குநா் மற்றும் உள்ளூா் திட்டக் குழுமத்தில் ஒப்புதல் பெற்ற பின்னா் வரைபடத்தில் காட்டியுள்ளபடி நிலையிலுள்ள கட்டிடங்கள் மேற்குப்புற வணிக வளாக கட்டிடம் அகற்றப்பட்ட பின்னரே மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்படும் என்ற நிபந்தனையின் பேரில் தற்சமயம் சமா்ப்பிக்கப்பட்டுள்ள பலமாடி கட்டிட பகுதியாக அறிவிக்கக் கோரும் உத்தேசத்தை மட்டும் மாமன்றத்தின் பரிசீலனைக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

மனுதாரரின் பலமாடி கட்டிடப் பகுதியாக அறிவிக்கக் கோரும் விண்ணப்பத்தை உள்ளூா் திட்டக் குழுமம், நகா் ஊரமைப்பு ஆணையரகம் வழியாக அரசுக்கு மேற்காண் நிபந்தனைகளின் பேரில் அனுப்பி வைக்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு</u> - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க.எண்.4581/ 09/ எச்-1 (மே)

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 90 நாள் 30.9.2009</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன், பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள மனையிடத்தினை பலஅடுக்குமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 19

மனுதாரர் திரு. J.R. நெஜட்லி மற்றும் திரு. G. பாலசுப்பரமணியம் என்பவர்கள் கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலம், கிருஷ்ணராயபுரம் கிராமம், நகரளவு எண். 95/2- ல் உள்ள 393.9 சென்ட் இடத்தினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய கோரி விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மனையிடம் மாநகராட்சி வார்டு எண். 17–ல் உள்ளது. உத்தேச மனையிடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 19-ல் அமைகிறது. மேற்படி மனையிடம் முழுமைத் திட்டத்தின்படி தொழிற்சாலை உபயோகத்தில் உள்ளது. மனையிடத்தின் முன்புறம் அவினாசி சாலை 100’00” அடி அகல தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. மனையிடத்தில் தற்போது பழைய கட்டிடம் நிலையில் உள்ளது. அதற்கு சொத்துவரி நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி பகுதியில் ஹோட்டல், அலுவலகம், வணிக வளாகங்கள் அபிவிருத்தி அடையும் பகுதியாக இருக்கிறது.

மேற்படி மனையிடத்தில் 45 மீட்டர் உயரத்தில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேச பலமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு முன்னர் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு துறை, ஏர்ப்போர்ட் அத்தாரிட்டி, தேசிய நெடுஞ்சாலைத் துறை, காவல் துறை மற்றும் மைக்ரோ வேவ் துறை தடையின்மை சான்று பெறப்பட வேண்டும். பலமாடிக் கட்டிடம் கட்டுவதற்கு விதிகள் நிறைவு செய்கிறது.

எனவே கோவை மாநகராட்சி, கிருஷ்ணராபுரம் கிராமம், நகரளவு எண்.95/2-ல் உள்ள 393.9 சென்ட் இடத்தினை பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்ய கோரும் மனுதாரரின் கோரிக்கையினை நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு கோவை உள்ளூர் திட்ட குழுமம் மூலம் அனுப்ப மாமன்றத்திற்கு பொருள் வரைவு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>-ஒப்புதல் செய்யலாம் ந.க. எண். 07180/09/ எச் 2 (வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 91 நாள் 30.9.2009</u>

அலுவலக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 20

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – உப்பிலிபாளையம் கிராமம் S.F.No. 391/07-ல் அமைந்துள்ள மனையிடத்தில் பல மாடிக்கட்டிடம் கட்டுதல்-அர்பன் எட்ஜ் ஹோட்டல் நிறுவனத்தார் விண்ணப்பம்-பல மாடிக்கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக்கோருதல் தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட உப்பிலிபாளையம் கிராமம் S.F.No. 391-ல் அமைந்துள்ள மனையிடத்தில் அர்பன் எட்ஜ் ஹோட்டல் நிறுவனத்தினர் மனையிடத்தில் ஏற்கனவே தரைத்தளம் மற்றும் 2 தளங்களில் உணவகம் கட்ட உத்தேசித்து இக்கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி எண்: 140/09/எச்1(கி) நாள்.26.3.09-ல் அனுமதி பெற்றுள்ளார்.

தற்போது இக்கட்டிடத்தில் கூடுதலாக 3-ம் மற்றும் 4-ம் தளம் கட்ட உத்தேசித்துள்ளார். உத்தேசக் கட்டிடம் பல மாடிக்கட்டிடமாக அமைவதால், இக்கட்டிடத்தின் மனையிடப்பகுதி பல மாடிக் கட்டிடப் பகுதியாக அமைய வேண்டும். எனவே இப்பகுதியினை பல மாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யப்படவேண்டும். மேலும் இம்மனையிடத்திற்கு அணுகுபாதையாக 60’ சாலை அமைகிறது. மற்றும் இம்மனையிடம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டஎண்.2ன் பகுதியில் குடியிருப்பாக அமைகிறது. மேலும் முழுமைத்திட்டத்தின்படியும் இப்பகுதி குடியிருப்பாக அமைகிறது.

எனவே மேற்கூறிய கட்டிடம் அமையும் மனையிடத்தை 20.0மீ உயரத்திற்குள் பலமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கும், ஒப்புதலுக்கும் பொருள் சமர்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக்குறிப்பு</u> - மாமன்றம் ஒப்புதல் செய்யலாம். ந.க.எண். 7820/07/எச்1 (கி)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 92 நாள் 30.9.2009</u>

அலுவலக் குறிப்பு ஒப்புதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், சித்தாபுதூர், சின்னசாமி ரோட்டில் நகரளவு வார்டு எண்.11, பிளாக்-39, நகரளவு எண்.1370/IC2A, 1370/1 உள்ள 47 சென்ட் 233 சதுரடி இடத்தில் பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோரி தி/வா. அட்ராய்ட், சென்னை நிறுவனத்தினர் 26.02.2009-ம் தேதிய விண்ணபத்தில் கோரியுள்ளார்.

மேற்படி மனையிடம் கோவை மாநகராட்சி வார்டு எண்.18-ல் உள்ளது. கோயம்புத்தூர் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டம் எண்.5-லும், மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சின்னசாமி சாலையினையொட்டி அமைந்துள்ளது. சாலையின் அகலம் 66'0'' ஆகும்.

மனுதாரர் ஸ்டில்ட், தரை மற்றும் மூன்று தளங்களில் 32 குடியிருப்புகள் அமையும் கட்டிடம் கட்ட ந.க.எண்.4705/2005/உ.தி.கு. திட்ட அனுமதி எண்.143/2006, நாள். 28.04.2006-ன்படி திட்ட அனுமதி பெற்றுள்ளார். தற்போது உத்தேசித்தினை மனுதாரர் மாற்றி, ஒவ்வொரு தளத்திலும் 5 குடியிருப்புகள் வீதம் 45 குடியிருப்புகள் கொண்ட 9 தளங்கள் கொண்ட கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தின் உயரம் 30 மீட்டர். கட்டிட வேலை ஆரம்பிக்கப்படவில்லை. வட்டாட்சியர் சான்றிதழ், கட்டிட உறுதி சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது. ஏர்போர்ட்ஸ் அத்தாரிட்டி, தீயணைப்புத்துறை, மைக்ரோவேவ் அத்தாரிட்டி மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய ஆட்சேபணையின்மை சான்று பெறப்பட வேண்டும்.

எனவே, மேற்படி மனையிடத்தினை பலமாடி கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிப்பு செய்யக் கோரும் மனுதாரரின் உத்தேசத்தினை நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு கோவை உள்ளூர் திட்டக் குழுமம் வாயிலாக அனுப்ப மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> -மாமன்றம் முடிவு செய்யலாம் ந.க.எண். 2521/09/எச்2(வ)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 93 நாள் 30.9.2009</u>

பொருளில் குறிப்பிட்ட இடத்தை பல அடுக்குமாடிக் கட்டிடம் கட்டும் பகுதியாக அறிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 22

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி- மாநகராட்சிப்பகுதிகளில் பயணிகள் பயன்அடையும் விதத்தில் பேருந்து நிறுத்த நிழற்குடைகள் அமைக்க, தனியார் நிறுவனங்கள் EOI மூலம் தேர்வு செய்தல் மற்றும் இதற்கான கட்டணம் நிர்ணயம் செய்வது - தொடர்பாக

பார்வை- 1. சாலை பாதுகாப்பு-சாலை பாதுகாப்புக்குழு கூட்டம் நாள் 09.09.2009ன்படி கோவை மாநகரப் பகுதிகளில் ஒளிரும் பேருந்து நிறுத்த நிழற்குடைகள் அமைக்கும் பணியினை தனியார் நிறுவனங்களுக்கு வழங்க பரிந்துரை செய்துள்ளதின்படி-மாவட்ட ஆட்சியர் அவர்களின் அலுவலக் கடித எண். ந.க.எண்.20954/08/இ3 நாள் 10.03.2009

2. நிழற்குடைகளுக்கு கட்டணம் நிர்ணயம் செய்தது தொடர்பான மாமன்றத் தீர்மான எண். 23 நாள்.30.04.2002
3. கட்டணத்தை ரத்து செய்தது தொடர்பான தீர்மான எண்.242 நாள் 29.12.2006
4. மீண்டும் கட்டணம் நிர்ணயம் செய்யத் தேவையில்லை என்பது தொடர்பான மாமன்றத் தீர்மான எண்.203 நாள்.29.08.2008
5. மாமன்றம் ஆணையருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் தொடர்பான மாமன்றத் தீர்மானம் எண். 320 நாள்.21.12.2000
6. மாநகர மன்ற தீர்மான எண். 69 நாள். 11.9.2009.

----------------

மேற்காண் பொருளில் குறிப்பிட்டுள்ள பயணிகள் நிழற்குடைகள் தனியார் அமைக்க நில வாடகையுடன் கூடிய உரிமக்கட்டணம் ரூ.25000- எனவும் அதில் விளம்பரம் செய்ய 1 ச.மீக்கு ரூ.250- எனவும் பார்வை 2-ல் குறிப்பிட்டுள்ள மாமன்றத் தீர்மானத்தின்படி முடிவு செய்ததனைத் தொடர்ந்து பல நிறுவனங்கள் கட்டணத்தொகை அதிகமாக உள்ளது எனக்கோரி நிழற்குடைகளை ஏதும் நிறுவப்படவில்லை.

இதனையடுத்து மாமன்றம் இக்கட்டணத்தை பார்வை எண் 3-ல் குறிப்பிட்டுள்ளபடி ரத்து செய்துள்ளது. மீண்டும் இது தொடர்பாக பார்வை எண்4-ல் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றம் இந்த பயணிகள் நிழற்குடைகளுக்கு கட்டணம் ஏதும் நிர்ணயிக்கத் தேவையில்லை என தீர்மானித்துள்ளது. மேலும் இது தொடர்பாக பயணிகள் நிழற்குடை அமைக்க அனுமதி வழங்க ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி பார்வை எண் 5ல் குறிப்பட்டுள்ளபடி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்நிலையில் கோயம்புத்தூர் மாநகரில் பயணிகள் நிழற்குடை இல்லாத இடங்களில் ஒப்பந்த புள்ளி அல்லது விருப்ப கேட்பு அறிக்கை (EOI) மூலம் நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பயணிகள் நிழற்குடை அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில் மாமன்றம் பார்வை 6-ல் குறிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் படி "மாநகரில் உள்ள அனைத்து பயணிகள் நிழற்குடை குறித்த முழுவிபரங்களுடன் மாமன்ற அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் விவாதித்து மீண்டும் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது" என தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

கடந்த 17.9.2009 -ம் தேதியன்று நடைபெற்ற மாமன்ற அனைத்துக் கட்சி கூட்ட தலைவர்கள் கூட்டத்தில் பொருள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

எனவே பயணிகள் நலனை கருத்தில் கொண்டும் மாநகராட்சியின் வருவாயினை பெருக்கவும் மாநகரில் பயணிகள் நிழற்குடையினை அமைக்கும் பொருட்டு விருப்ப கேட்பு அறிக்கை (EOI) மூலம் பயணாளிகளை தேர்வு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு-</u> பயணிகள் நிழற்குடை அமைக்க விருப்ப கேட்பு அறிக்கை (EOI) கோர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 5541/2009/எம்.எச். 5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 94 நாள் 30.9.2009</u>

1. விருப்பக் கேட்பு அறிக்கை (Expression of interest), ஒப்பந்தப்புள்ளி கோரி தகுதி வாய்ந்த நிறுவனங்களை தேர்வு செய்து அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் பயணியர் நிழற்குடைகள் (Bus shelter) அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

2. மேற்படி நிறுவப்படும் பயணியர் நிழற்குடைகளில் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி, தனியார் மற்றும் அரசு சார்புடைய விளம்பரங்களை செய்ய அனுமதி அளிக்கவும் பயணியர் நிழற்குடைகளுக்கு, இடத்தின் அமைவிடத்தைப் பொறுத்து கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ள ஆணையருக்கு அதிகாரம் வழங்க அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. புதியதாக நிறுவப்படும் பயணியர் நிழற்குடைகளுக்கு பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா நினைவு நிழற்குடை அல்லது உலகத் தமிழ் மாநாடு நிழற்குடை என பெயர் சூட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூா் மாநகராட்சி வடக்கு மண்டலம், கிருஷ்ணராயபுரம் கிராமம் சா்வே எண். 132/5 பகுதியில் உள்ள 55 சென்ட் நிலம், தாமோதிரம் தா்ம ஸ்தாபனத்திற்கு சொந்தமானது. மேற்கண்ட இடத்தில் சுமாா் 45 வருடங்களாக கோயம்புத்தூா் மாநகராட்சியின் நடுநிலைப்பள்ளி குத்தகை அடிப்படையில் இயங்கி வந்தது. மேற்படி கட்டிடம் பழுதடைந்ததால் 2004-ம் வருடம் முதல் மாநகராட்சியால் மேற்படி இடத்தில் பள்ளியை நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. மாநகராட்சி செலுத்தி வந்த குத்தகை தொகையினை ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பியதுடன் இடத்தினை தம்மிடம் திரும்ப ஒப்படைக்குமாறு தாமோதரம் தா்மஸ்தாபனம் கோரிக்கை விடுத்ததின் பேரில் மாநகராட்சி வழக்கறிஞரின் சட்டக்கருத்தின் பேரிலும் வட்டாச்சியரின் சொத்துரிமை சான்றிதழின் பேரிலும் ந.க.எண். 6840/04/எச்2(வ) நாள். 22.2.08–ன் படி மேற்படி இடத்தை மாநகராட்சியால் திரும்ப வழங்கப்பட்டது.

இந்நிலையில், மேற்படி உத்திரவு மாமன்ற ஒப்புதல் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளதால் அவ்வுத்திரவினை ரத்து செய்யவும், மேற்கண்ட இடத்தினை நில ஆா்ஜித சட்டம் மூலம் கையகப்படுத்தி, மாநகராட்சி பள்ளி அமைக்கவும் மாமன்றத்தில் சிறப்பு தீா்மானம் எண். 18 நாள். 28.4.2008-ன் மூலம் தீா்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை தொடா்ந்து மேற்படி இடத்தை கையகப்படுத்தி பள்ளிக் கட்டிடம் அமைக்க நிா்வாக ஒப்புதல் கோரி அரசுக்கு 22.10.2008-ம் தேதியில் அனுப்பியதில், முன்மொழிவு அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

மாநகராட்சி கல்வி அதிகாரி அவா்கள் தனது குறிப்பில் மேற்கண்ட பள்ளி கட்டிடம் பழுது அடைந்த நிலையில் அருகில் இருந்த ஷோபா நகரில் மாநகராட்சிக்கு சொந்தமான 5142 சதுரடி பரப்பளவுள்ள இடத்தில் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு 1999 முதல் பள்ளி செயல்பட்டு வருகிறது எனவும் இதில் 1 முதல் 8 வகுப்புகளும் 315 மாணவ, மாணவியவா்கள் பயின்று வருகின்றனா் எனவும், தற்பொழுது 10 வகுப்பறைகளும், சத்துணவு சமையலறையும் மற்றும் கழிவறை வசதிகளும் உள்ளது எனவும், மாணவ, மாணவியா் உணவு அருந்தும் அறை மட்டும் தேவை எனவும், தற்போதைய மாணவ, மாணவியா் எண்ணிக்கையில் போதுமான வசதிகள் உள்ளன எனவும் எதிா்காலத்தில் பள்ளி விரிவாக்கத்திற்கு போதுமான இட வசதிகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளாா்.

மேற்படி இடம் குறித்து நில மதிப்பு விவரம் பெறப்பட்டதில், வழிகாட்டி மதிப்பின்படி சதுரடி ரூ.296/- ஆக உள்ளது. அதனடிப்டையில் 55 சென்ட்டிற்கு மொத்த மதிப்பு ரூ. 70.98 லட்சம் ஆகும். மற்றும் புதிய பள்ளி கட்டிடம் கட்டும் செலவு ஆகியவையும் இதில் சோ்க்கப்பட வேண்டும்.

எனவே மேற்குறித்த தாமோதரம் தா்மஸ்தாபனம் இடத்தை மாநகராட்சியால் கையகப்படுத்தி, புதிய பள்ளி கட்டிடம் அமைப்பது குறித்த இப்பொருள் மீது மாமன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு- மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண் 6840 / 2007 / H2 (வ)

## மாநகர மன்ற தீா்மானம் எண் 95 நாள் 30.9.2009

ஷோபா நகரில் தற்போது பள்ளி செயல்பட்டு வருவதனாலும், V.G. ராவ் நகரில் புதிய பள்ளி கட்டிடம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதனாலும், புதியதாக பள்ளி அமைக்க இடம் கையகப்படுத்த தேவையில்லை என்பதனால் 28.04.2008ம் தேதிய மாமன்ற சிறப்புத் தீா்மானம் எண். 18ஐ ரத்து செய்ய தீா்மானிக்கப்பட்டது.

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தை கையகப்படுத்தும் முன்மொழிவு அரசின் ஆய்வில் இருந்து வருவதனால், மாமன்ற சிறப்புத் தீா்மானம் எண். 18 நாள் 28.04.2008-ன்படி இடம் கையகப்படுத்தி பள்ளி கட்டிடம் அமைக்க வேண்டும் என தெரிவித்து, தீா்மானத்திற்கு மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சேபனை தெரிவிப்பதாக 3-வது வாா்டு மாமன்ற உறுப்பினரும், சி.பி.எம். மாமன்ற கட்சிக்குழுத் தலைவருமான திரு. சி. பத்மனாபன் ஆட்சேபனை தெரிவித்தாா். ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 24

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு எம். சௌந்தரராஜன், செயற் பொறியாளர்(திட்டம்) - மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இம்மாநகராட்சியில் தொடர்ந்து பணிபுரிய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுவது –தொடர்பாக.

பார்வை - நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 40169/08எப். 4 நாள் 13.04.2009.

------------------

இம்மாநகராட்சியில் செயற் பொறியாளர் (திட்டம்) ஆக பணிபுரியும் திரு எம். சௌந்தரராஜன், அவர்களை அயற்பணி அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சியிலிருந்து அரசாணை (ப) 500, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 23.09.2004-ன்படி மாற்றம் செய்யப்பட்டு 25.09.2004 முதல் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார். மேலும் இவர் உதவி ஆணையர் (வடக்கு) ஆக கூடுதலாக பணிபுரிந்து வருகிறார்.

திரு எம். சௌந்தரராஜன், செயற் பொறியாளர் (திட்டம்) அவர்களின் 31.07.2008ம் தேதிய விண்ணப்பத்தில் தனது மகள் கோயம்புத்தூரில் 3-வது வருடம் பி.டெக் படித்து வருவதால் இம்மாநகராட்சியில் சில வருடங்கள் தொடர்ந்து பணிபுரிய, அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலம் விண்ணப்பம் அளித்துள்ளார்.

இவ்வலுவலக மே.இ.எண். 10119 /08/ எம்.சி.2, நாள் 31.07.2008-ன்படி திரு எம். சௌந்தரராஜன் இம்மாநகராட்சியில் (Auto DCR) கணினிப் பணி செய்து வருவதால் இம்மாநகராட்சி பணிபுரிய நீட்டிப்பு கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

பார்வையில் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் இம்மாநகராட்சியில் மேற்படியார் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமாயின் அரசின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும், அரசாணை எண். (நிலை) 741, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 24.6.1978-ல் குறிப்பிட்டுள்ளவாறு செயற் குறிப்பு மற்றும் மாநகர மன்ற ஒப்புதலுடன் அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ளது.

எனவே இது குறித்து அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 3987/09/எம்.சி. 1

மாநகர மன்ற தீர்மானம் எண் 96 நாள் 30.9.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி